**வடமாகாணக் கல்வித் திணைக்களத்துடன் இணைந்து**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**தவணைப் பரீட்சை, மார்ச் - 2020**
**Conducted by Field Work Centre, Thondaimanaru**
**In Collaboration with Provincial Department of Education**
**Northern Province**
**Term Examination, March - 2020**

| தரம் :-12 (2021) | இந்துசமயம் | புள்ளித்திட்டம் |
|---|---|---|

## பகுதி - I

| | | | | |
|---|---|---|---|---|
| 1) 2 | 6) 5 | 11) 2 | 16) 2 | 21) 3 |
| 2) 4 | 7) 5 | 12) 3 | 17) 1 | 22) 1 |
| 3) 4 | 8) 3 | 13) 1 | 18) 3 | 23) 5 |
| 4) 2 | 9) 1 | 14) 4 | 19) 5 | 24) 4 |
| 5) 2 | 10) 5 | 15) 5 | 20) 1 | 25) 4 |

(25 x 2 = 50புள்ளிகள்)

## பகுதி – II

## பகுதி – I

01) *கி.மு 3250 – கி.மு 2470 காலம், இற்றைக்கு 5000 ஆண்டுக்கு முன்பு*

I) நகரங்கள்
மொகஞ்சொதரோ
ஹரப்பா (அரப்பா)
தகஞ்சோதாரோ
லோதார்
ஆலம்சீர்மூர்.

agaram.lk

II) முத்திரைகள், கல்வெட்டுக்கள், சூம்புருவக் கற்கள், கட்டிடங்கள், தாயத்துக்கள், வெண்கலப்படிமங்கள்

III) 1. சிவ வழிபாடு - இலிங்க வழிபாடு, பசுபதி வழிபாடு
2. சக்தி வழிபாடு – தரைப்பெண் வழிபாடு, மரதேவதை வழிபாடு
3. இயற்கை தெய்வ வழிபாடு - சூரிய வழிபாடு
வழிபடும் முறை
4. பலியிடல் (சடங்கு)

**சிவ வழிபாடு**

- இலிங்க வழிபாடு சூம்புருவக் கற்கள் (600)
- முத்திரையில் யோக நிலையில் அமர்ந்த யோகியின் வழிபாடு

நந்தி வழிபாடு – நந்தி இலட்சினை, எருது காணப்பட்டது.

அதனைச் சூழ யானை, புலி, எருது, கண்டாமிருகம் முதலான மிருகங்கள் காணப்படுகின்றமை.

**சக்தி வழிபாடு**

- சிந்து வெளியில் நிலவிய தரைப்பெண் வழிபாடு சக்தி வழிபாட்டினை இனங்காட்டுகின்றது.
- ஒரு பெண்ணின் கருப்பையில் இருந்து செடி ஒன்று முளைப்பது போன்று பொறிக்கப்பட்ட முத்திரை உற்பத்திக்குக் காரணமாக பூமியை தாயாக வழிபட்டனர் எனக் கொள்ளப்படுகின்றது.

**நாக வழிபாடு**

- முக்காலி ஒன்றில் மேல் பாற்கிண்ணம், அதில் பாம்பு படம் எடுத்தபடி இருப்பது போன்ற வடிவம்.

**மர வழிபாடு**

- சில முத்திரைகளில் மரங்களில் உறையும் பெண் தேவதைகளின் வடிவம் காணப்படல்.

**பலியிடுதல் சடங்கு**

- ஒரு முத்திரையில் ஒரு பெண் தலையை தாழ்த்திக் கொண்டிருப்பது போலவும் ஒருவர் வாளை ஓங்கிக் கொண்டிருப்பது போலவும் காணப்படல்.

**நிவேதன வழிபாடு**

- படைக்கும் தட்டுக்கள் காணப்படல்.

[ 5 + 7+ 8 = 20 புள்ளிகள்]

02) I) சிவாகமங்களின் சிறப்பு

- இந்து சமய வரலாற்றில் வேதங்களைப் போல் ஆகமங்கள் முதன் நூல்கள் ஆகும்.
- சிரௌதம், சுபதந்திரம் ஆன ஆகமம் சிறப்பிக்கப்படுகின்றது.
- வேதங்கள் பொதுநூல் எனவும், ஆகமங்கள் சிறப்பு நூல் எனவும் கொள்ளப்படுகின்றன.
- ஆகமங்கள் சிறப்பு நூல்கள் என்ற வகையில் சை ஆகமங்கள் சிவாகமங்கள் எனவும், வைணவ ஆகமங்கள் சங்கிதைகள் எனவும் சாக்த ஆகமங்கள் தந்திரங்கள் எனவும் அழைக்கப்படும்.
- இந்து சமய தத்துவக் கோட்பாடுகள் பலவற்றில் ஆப்தவாக்கியம் பிரமாணமாக அமையும் சிறப்புடையது.
- .இந்துக்களின் கோயில் கட்டிட, சிற்பக்கலைகளை எடுத்துக் கூறுவதும் ஆகும்.
- ஆகமம் ஆலய வழிபாடு, சமய அனுட்டானம், சைவ சித்தாந்த சிந்தனை போன்ற விடயங்களின் ஊடாக, மக்களின் வாழ்வோடு நெருக்கமுற்று விளங்குவதோடு, இறையின் நூல் என அழைக்கப்படும். ஆலய கிரியை, பிராமண வித்தைகளைக் கூறுவதால் சிறப்புப் பெறுகிறது.

II) நித்திய கிரியைகள்

- நித்திய கிரியை என்பது ஆயலயத்தில் தினமும் நிகழும் நியதிச் செயலாகும். நித்திய கிரியை ஆலயங்களில் நிகழும் போது ஆவாகனம், அபிஷேகம், அலங்காரம், தீபாராதனை, தோத்திரம் நியதி பின்பற்றப்படும்.
- சிவாலய வசதிக்கேற்ப பன்னிரு காலமோ, ஆறு காலமோ மூன்று / ஒரு வேளையோ நடைபெறும்.
- தமிழக திருந்செந்தூரில் பன்னிரு வேளை பூசை நடத்தப்படும்.
- பிரிவுகள் - உஷைக்காலப் பூசை [அதிகாலைப் பூசை]

agaram.lk

| | |
|---|---|
| காலைச்சந்திப் பூசை | [காலை பூசை] |
| உச்சிக்காலப் பூசை | [மதியப் பூசை] |
| சாயரட்டைப் பூசை | [மதியப் பூசை] |
| இரண்டாங்காலப்பூசை | [மாலைப் பூசை] |
| அர்த்தசாம பூசை | [சாமப் பூசை] |

III) சைவ சித்தாந்த மூலகங்கள்

- ஆன்ம ஈடேற்றம் கருதி ஆகமக் கிரியை முறைகள் வகுக்கப்பட்டுள்ளன.
- கோயிலையும் திருவுருவ அமைப்பையும் மையமாக கொண்டவை கிரியைகள்
- கோயில்கள் இடம் பெற வேண்டிய கிரியைகள் அவற்றை ஆற்றும் விதிகள், பூஜை அம்சங்கள் மந்திர உச்சாடனங்கள் நிவேதனப் பொருள் பற்றிய விளக்கங்கள்.
- பூஜா விதிப்படலம் மந்திர அவதாரப் படலம் பற்றிய கருத்துக்கள் கர்ஷணம் உற்சவம் பிராயசித்தம் பற்றிய விளக்கம்.
- கொடியேற்றக்கிரியை சித்தாந்த உண்மைகளுடன் தொடர்புடையது. கொடியேற்றப்படாத நிலையில் கொடிமரம் பதியின் சொரூப நிலையை உணர்த்துகின்றது.
- மகோற்சவத்தின் போது நடைபெறுகின்ற பல்வேறு கிரியைகளும் சைவ சித்தாந்தம் கூறுகின்ற ஐந்தொழில் தத்துவத்துடன் தொடர்புடையன.

IV) ஆகமம் பெறும் முக்கியத்துவம்

**சமயம் :-**

- [ கிரியை பூர்வ, அபர, நித்திய, நைமித்திய, ஆன்மார்ந்த பார்த்த கிரியைகள். ஆலய அமைப்பு விக்கிரகம் வழிபாடுகள் என்ற வகையில் முக்கியம் பெறல்.

**தத்துவம் :-**

- முப்பொருள், பஞ்சகிருத்தியம், முத்தி ஆன்ம விடுதலை மார்க்கங்களை விளக்குவதால் முக்கியம் பெறுகிறது.
- வாழ்வியல் சடங்குகள் பண்பாட்டு மரபுகளில் முக்கியம் பெறுகிறது.

**கலை :-**

- விக்கிரகம், கட்டிடம், இசை, நடனம், ஓவியம், சிற்ப மூடாக முக்கியம் பெறுதல்.

[ 5 + 5 + 5 + 5 = 20 புள்ளிகள் ]

03) I. வழிபாட்டு நெறிகள்

- புராணங்கள் பழைய வரலாறுகளைக் கூறுவனவாக இருப்பினும் அங்கே பல சமயப பிரிவுகள் உள்ளன. அவற்றினடிப்படையில் அதற்கான கடவுளர்களும் முதன்மைப்படுத்தப்பட்டன. இதனால் ஆலயங்கள் தோற்றம் பெற்றன. ஆலயத்தை ஓட்டியதலம், தீர்த்தம், யாத்திரை, யாகம், தோத்திரப்பாடல், தியானம், மந்திரோபசனை போன்ற வழிபாட்டு முறைகள் தோன்ற ஏதுவாகின. இவை தவிர விரதம் அனுட்டிக்கும் முறையும் இக்காலத்தில் இருந்தது.

II. ஒழுக்க நெறி

- இந்து ஒழுக்கவியல் கோட்பாட்டு அம்சங்கள் புராணங்களில் காட்டப்பட்டுள்ளன. இங்கு பக்தி தான் பிரதான ஒழுக்க நெறியாகக் காட்டப்படுகின்றது. பக்தி இந்து ஒழுக்கவியல் கோட்பாடுகளில் ஒன்று என்பதையும் நாம் மறந்து விட முடியாது. பக்தியுடன் தொடர்புடைய அறக் கோட்பாடும் சிறந்த ஒழுக்க நெறியாகக் கொள்ளப்படுகின்றது. இந்த அறமானது வேத உபநிடதங்களில் பெறப்பட்டு அது இலகுவான முறையில் அனைவராலும் புரிந்து ஏற்றுக் கொள்ளக்கூடிய வகையில் விளக்கப்பட்டுள்ளது.

III. சமய நெறி

agaram.lk

- புராணங்கள் இந்து சமயத்தின் கருவூலங்களில் சிறப்பானவையாகும். வடமொழியில் எழுந்த மகாபுராணங்கள் பதினெட்டு ஆகும். அதனால் பதிணென் புராணங்கள் எனப்பட்டது. இதில் இந்து சமயத்தில் காணப்படும் தெய்வ வழிபாட்டு அம்சங்கள் பலவாறு பேசப்படுகின்றன. இம் மகா புராணங்களில் முதல் பத்தும் சிவபுராணங்கள். அடுத்த நான்கும் விஸ்ணு புராணமாகும். அதைத் தொடர்ந்து பிரபுராணம் இரண்டு அக்கினி, சூரிய புராணம் ஒவ்வொன்றாகும்.
- இந்து சமய நெறிகளான அறுவகைச் சமயங்களுக்குரரிய கருவூலங்களை நாம் புராணங்களில் கண்டு தெளியலாம். இந்து சமய நம்பிக்கைகள், வழிபாட்டுமுறைகள், தத்துவங்கள் என்பவற்றை இணைத்துக் கூறுகின்ற வகையில் அதற்கு சிறப்பு உண்டு. ஆலயவழிபாடு, திருவுருவவழிபாடு, தலயாத்திரை, விரதம், தவம், தோத்திர முறைகள் முதலிய அம்சங்களே விருத்தியடைந்துள்ளது.

IV. கோயிற்சிற்பங்கள்

- கோயிலில் சித்திரிக்கப்படுகின்ற சிற்ப வேலைப்பாடுகளுக்கு பெரிதும் ஆதாரமாக விளங்குபவை. புராணக் கதைகளாகும். புராந்தகர், காமந்தகர், லிங்கோற்பவர் முதலிய சில வடிவங்கள் செகுதுக்கப்படுவதற்கு புராணங்களே பெரிதும் துணை புரிந்தன. வைணவ சிற்பங்களும், வைணவ புராணங்கள் மூலம் வெளிப்படுத்தப்பட்டன. இதுபோல சக்தியின் மகிசாசுரமர்தனி வடிவம் போன்றவற்றையும் கூறலாம். சிற்பியின் ஆதார நூல்களில் புராணங்களும் அடங்குகின்றது.

[ 5 + 5 + 5 + 5 = 20 புள்ளிகள் ]

04) I) மன்னர்களும் பணியும்.

- சிம்ம விஸ்ணுவைணவ சமயத்தவனாவான் இவனது மகனே மகேந்திரவர்மன் ஆவார்
- பல்லவர் காலத்து பக்தி நெறியில் பெரும்பங்கு வகித்தவன் சிம்ம விஸ்ணுவே ஆயினும் மகேந்திரவர்மன் காலத்திலேயே இந்த மத மறுமலர்ச்சியும் சமய நிலையில் திருப்பங்களும் புதுமைகளும் ஏற்பட்டன.
- பல்லவர் காலம் கி.பி 580 – கி. பி 850 வரை பல்லவ பாண்டியரின் இணைப்புக்களும் அரச ஆதாரமுடன் வைதீக நெறி வளர்ச்சி பெற்ற காலம், நாயன்மார்களின் முயற்சியால் மன்னர்கள் சைவ சமயம் தழுவி சைவத்தை வளர்த்தல், நந்திக் கொடி அரச சின்னமாகவும் சைவ சின்னமாகவும் விளங்கியமை, அழியாப் பொருட்களை கொண்டு திருக்கோயிலினை அமைத்து கட்டக்கலையோடு ஏனைய நுண்கலைகளையும் வளர்த்தனர். கல்வி நிர்வணங்களை காஞ்சியில் நிறுவினர். மகேந்திரவர்மன் சமயத்தோடு கலைகளையும் வளர்த்து சித்திர காரப்புலி, சங்கீர்ணகதி, குணபரன் விசித்திரசித்தன் எனவும் இராஜசிம்மன் ஆகமப்பிரியன் சிவசூடாமணி சங்கரபக்தன் வைச சித்தாந்த மார்க்கி என்ற பெயர்களால் சிறப்பிக்கப்பட்டமை என்பனவாகும்.

II) பக்தி இயக்கம்

- சங்கருவிய காலத்திலே தமிழகத்தில் வளர்ந்த அவைதீக மத நெறிகள் பல்லவர் காலத்திலும் செல்வாக்குச் செலுத்த முற்பட்டனரது. இத்தகைய சூழ்நிலையிலே அவை தீக மத நெறிகளை வளர்ப்பதற்காக அக்கால மன்னர், மக்கள் சமயப் பெரியோர்கள் அனைவரும் ஒன்று இணைந்து செயற்பட்டமையால் பக்தி இயக்கம் தோற்றம் பெற்றது.
- பக்தி இயக்கத்தின் முன்னோடிகளை சம்பந்தரும் அப்பர் சுவாமிகளும் விளங்கினர்.
- பொது மக்களை சமய நெறியில் ஈடுபடவைப்பதில் பக்தி இயக்கம் பெருந்தொண்டாற்றியது.
- திருமுறை பாராயணம், தலயாத்திரை. சமயவாதம் என்பவற்றில் பக்தி இயக்கத்தின் செல்வாக்கு காணப்பட்டது.

agaram.lk

- மன்னர்களின் ஆதரவும் காணப்பட்டது, பக்தி இயக்கத்தினர் ஆலயம் பணிகளிலும் ஈடுபட்டனர்.
- புறசமயக் கண்டணம்
- சைவசமய மீளுருவாக்கம்
- கலைஞர்களினை இணைத்தல்.
- இசையுடன் தோத்திரம் பாடல்
- இறைவனை அன்பு நெறியில் வழிபடல்.

III) நாயன்மார் பணிகள்.

- சைவசமய நாயன்மார்கள் நால்வரும் சைவசமயத்திற்குத் தலைமை தாங்கி சைவபக்தி இயக்கம் வளம் பெறச் செய்வதில் பெரும்பங்கு வகித்தனர். தத்தமது அரிய பணிகளால் சைவ விடயங்களைப் பதிகங்களின்மூலம் வெளிப்படுத்தினர். சிவனது பரத்துவம், சைவ வாழ்வு போன்ற அம்சங்கள் குறிப்பிட இறைவழிபாட்டில் ஈடுபடும் போது பல்வகை உறவுமுறைகளைக் கடைப்பிடித்தனர். இவர்களது அரிய பணிகளால் ஆலய வழிபாடும் ஆலய சேவைகளும் சைவ சாதனைகளாகப் பரிணமித்தன் தமது திருப்பதிகங்களை பண்ணுடன் பாடிச் சைவ சமயத்திற்கு பெருமை சேர்த்தனர். பண்ணுடன் பாடும் திருஞானசம்பந்தரும் ''என்கடன் பணி செய்து கிடப்பதே'' என்று பாடிய திருநாவுக்கரசரும் பக்தரைப் பணிந்து பாடும் சுந்தரமூர்த்தி நாயனாரும் இறைவழிபாட்டில் ஈடுபட்டு சைவ பக்தி இயக்கம் வளம்பெற அர்ப்பணிப்புடன் பணியாற்றினர்.
- நாயன்மார்கள் தமது அற்புதச் செயல்கள் மூலம் இறை உண்மையை நிரூபித்தனர். மக்களுடன் தொடர்புபட்டுப் பணியாற்றனர். நாயன்மாரின் பதிகங்களில் புராணக்கதைகள், சிவனது பரத்துவம் முதலியன போற்றப்பட்டன. மக்களும் அவற்றைப் பாடிக்கழிக்கும் நிலையும் ஏற்றபட்டது. சைவசித்தாந்த தத்துவப் பொருளை மிக எளிமையகப் பதிகங்கள் மூலம் வெளிப்படுத்தி அச்சிந்தனைகள் வளம் பெற உதவினர்.

IV) திருக்கோயில் வழிபாடு

- பல்லவ அரசர்கள் குடைவரை, ரதக் கோயில்கள், கற்றளிகள் எனறவாறு பல்வகை ஆலயங்களை அமைத்தார்கள். இவ் வாலயங்கள் சைவபக்தி இயக்கம் வளம் பெற அடித்தளமிட்டன.
- சைவ பக்தி வெளிப்பாட்டிற்கும் இறை வழிபாட்டிற்கும் உரிய நிலையங்களாகத் திருத்தலங்கள் விளங்கின. ஆகம முறையான வழிபாடுகள் இடம் பெற்றன. அவை திருவுருவ வழிபாட்டின் நிலைக்களனாகவும் விளங்கின. சிற்ப, இசை, நடன மற்றும் ஓவியம் போன்ற கலைகளின் உறைவிடமாகவும் திருத்தலங்கள் விளங்கின. மூர்த்தி, தல, தீர்த்தப் பெருமை பெற்ற தலங்களின் பக்தி நெறி பரவ சிறந்த வாய்ப்பு ஏற்படலாயிற்று. நாயன்மார்கள் தத்தமது திருப்பதிகங்கள் மூலம் தலப் பெருமைகளைப் பாடிப் பரவினார். திருத்தலங்கள் பாடல் பெற்ற தலங்களாகப் போற்றப்பட்டன. திருத்தலங்களில் சிவனடியார் பணி செய்வதன் வழி அடியார் பெருமை மேலோங்கியது. மக்களும் திருத்தல வழிபாட்டில் ஈடுபடுவதனால் பக்திநெறி வளம் பெறலாயிற்று சோழர்காலத்தில் சோழ அரசர்களால் சைவசமயம் மேலோங்குவதற்கு பல்லவர் கால பக்தி இயக்கமே மூலகாரணமாகியது. என்பதும் குறிப்பிடற்பாலது.

[ 5 + 5 + 5 + 5 = 20 புள்ளிகள்]

05) I) நடராஜர் வடிவத்தின் தோற்றப் பொழிவு

- சிவமூர்த்தங்கள் 64 ஆகும்.
- இதில் சிறப்பாக 25 மூர்த்தங்கள் குறிப்பிடப்படுகின்றன.
- இதில் நடராஜர் வடிவமும் ஒன்று
- சிற்பசாத்திரங்கள் கூறும் அளவுப் பிராமணங்களின் படி அமைக்கப்படுகிறது.
- அங்க இலட்சணங்களும் அவை உணர்த்தும் உண்மைகளும்.

முயலகன் - ஆன்மா

பாம்பு - ஆணவம்

புலித்தோல் - கோபத்தைக் கட்டுப்படுத்துபவன்

முக்கண் - இச்சா சக்தி, கிரியா சக்தி, ஞானசக்தி

சிலம்பு - பல வினைகள் பிறவித் துன்பத்தை நீக்குவதைக் குறிக்கின்றது.

திருவாசி - ஓங்காரத்தைக் குறிக்கின்றது.

பவளநிற [சிவந்த] திருமேனி - தூய்மைப்படுத்தும் தன்மையைக் காட்டும்.

நான்கு சக்கரம் - திசைகளைக் குறிக்கும்.

நெற்றிக்கண் - உயிர்களுக்கு ஏற்படும் துன்பங்களை புன் முறுவலால் நீக்குகிறார் என்பதைக் குறிக்கும்.

சடாமுடி - ஞானத்தைக் குறிக்கும்.

பிறை - பேரழகைக் குறிக்கும்

திருநீறு - பராசக்தியைக் குறிக்கும்.

சூலம் - முச்சக்தியைக் குறிக்கும்.

கோடரி - பேராற்றலைக் குறிக்கும்.

மான் - வேதநாயகனைக் குறிக்கும்.

agaram.lk

II) நடராஜர் வடிவம் புலப்படுத்தும் தத்துவச் சிறப்பு

- பஞ்சகிருத்திய வடிவம்

  [சிருஷ்டி] படைத்தல் - உடுக்கை ஏந்திய கை

  [ஸ்திதி] காத்தல் - அபயகரம்

  [சங்காரம்] அழித்தல் - தீ ஏந்திய கரம்

  [திரோபம்] மறைத்தல் - ஊன்றிய திருவடி

  [அநுக்கிரகம்] அருளல் - தூக்கிய திருவடி

- திருவைந்தெழுத்தின் தொடர்பு

  ந - திருவடி

  ம - திருவயிறு

  சி - திருத்தோள்

  வா - திருமுகம்

  ய - திருமுடி

- சைவ சித்தாந்தம், திருமந்திரம் முதலானவை. நடராஜரைப் போற்றும் பண்பு கொண்டவை.
- சைவ சித்தாந்தின் அனைத்துக் கோட்பாடுகளையும் நடராஜ மூர்த்தம் பிரதி பலிக்கிறது.

[10 + 10 = 20 புள்ளிகள்]

06) I) புராணக் கதைகள்

- குமாரக் கடவுள் தொடர்பான புராணக்கதைகள், தொடர்பான விளக்கம்
- குமாரனின் உற்பத்தி, தத்துவம் தொடர்பான அம்சங்கள்
- சரவணம் பொயகையில் தோன்றியமை, சூரபத்மன் வதைத்த கதைகள்
- கந்தபுராணம், முருகனின் தோற்றம், சூரபத்மன்வதம், அருள், திருப்பெருவடிவம் என்பவை பற்றி கூறுகின்றது.
- சங்கரசங்கிதையில் முருகனும், சிவனும் பிரணவத்தின் பொருளாக இருப்பதைக் கூறுகின்றது.
- சங்க காலத்திலிருந்து முருக பரத்துவம் போசப்பட்டு புராணங்களில் முருகனின் புகழ் உச்ச நிலையை அடைந்து எனலாம். [திருமுருகாற்றுப்படை]

II) பிரதிமாலட்சணம்

- முருகனின் மூர்த்தி பேதம் பற்றி கூறுவன திருமுருகாற்றுப்படை, குமாரதந்திரம் என்பன சிவனின் சோதிப்பிழப்பு – 12 கரங்களும் ஆறு முகங்களும் கொண்டு முருகனாக வந்தருளினார் என கூறுகிறது.
- பாணினியின் நூலில் முருகனின் மறுபெயர்கள், காங்கேயன், குகன், சண்முகன், விசாகன், கார்த்திகேயன்
- பன்னிருகையில் ஒவ்வொரு தெய்வப்படை உண்டு
- அவை :- கேடயம், சேவற்கொடி, அங்குசம், வரதமுத்திரை, பாசம், வில், சக்கரம், வஜ்ராயுதம், சக்திவேல், சக்தி, சூலம், அபயமுத்திரை
- திருவுருவங்களினுடைய அங்கலட்சணங்கள் தொடர்பான விளக்கம்.

| | | |
|---|---|---|
| பாதம் | - | ஏழு பாதாள உலகங்கள் |
| கணுக்கால் | - | சம்பததீவு |
| இடைவஸ்திரம் | - | சப்தசமுத்திரம் |
| புயம் | - | அட்டதிக்கு |
| சிரசு | - | சுவர்க்கலோகம் |
| மூன்றுகண் | - | அக்கினி |
| கேசம் | - | மேகம் |
| மலர் | - | நட்சத்திரம் |
| ஆத்மா | - | பரமசிவன் |
| புத்திரி | - | பார்வதி |
| வாமபாகம் | - | விஸ்ணு |
| தட்சிணைபாகம் | - | பிரமன் |
| வாக்கு | - | சரஸ்வதி |
| செல்வம் | - | லட்சுமி |

- முத்தி இன்பத்தை நல்கும் அத்துவாக்கள் ஆறும் ஆறுமுகம் பெருமானிடத்து அடங்கும். அத்துவர் என்பது ஆன்மா மலங்களை நீக்கி முத்தியடைவதற்கான வழிகள் என்பதாகும். அவையாவன மந்திராத்துவர், பதாத்துவர், வருணத்துவர், புவனாத்துவர், தத்துவாத்துவர், தலாத்துவர் என்பன ஆகும்.
- முருகனின் ஆறு திருமுருகங்களுள் முதல் நான்கும் வேத வாக்கிய சொரூபங்களையும் அடுத்த இரு திருமுகங்களும் இதிகாச புராண மகாவாக்கிய சொரூபங்களாகவும் உள்ளன.
- "அண்டமும் புவணமும் யாவும் அமரமும் பிறவுந்தன்பால் கண்டிடும் வடிவம்" என கந்தனுடைய விஸ்வரூபத்தைப் பற்றி கந்தபுராணம் விரிவு பட கூறுகிறது.
- சூரபக்த்மன், சிங்கமுகன், ஆதிசூரன், பானுகோபன் முதலிய அசுரர்களை வென்றமையை சைவசித்தாந்தச் சிந்தனைகளுடன் தொடர்புபடுத்திக் கூறுகின்றது.

agaram.lk

| | | |
|---|---|---|
| மூன்று அசுரர்கள் | - | மும்மல அழிவு |
| சூரன் | - | ஆணவம் |
| சிங்கமுகன் | - | கன்மம் |
| தாரகன் | - | மாயை |

III) கடவுட் கோட்பாடு

- ஸ்கந்த புராணக்கதை அடிப்படையாகக் கொண்டு விளக்குதல்.
- முருகன் நீதிக் கடவுளாகவும், அழகுத் தெய்வமாகவும் கூறப்படுதல் அத்துடன் மும்மலங்களை நீக்குபவராகவும் கருதப்படுகின்றார்.

| | | |
|---|---|---|
| சூரபன்மன் | - | ஆணவம் |
| சிங்கமுகன் | - | கன்மம் |
| தாரகன் | - | மாயை |

- சிவாகமங்களில் காமிகம், காரணம், சுப்பிரபேதம், அம்சுமதி பேதம் என்பன.
- உத்தரகாமிகம் முருகனுக்கு தனிக்கோயில் அமக்கும் முறை, பூசை, வழிபாடு பற்றி கூறுகிறது.

IV) இலக்கியங்கள்

- வடமொழி, தமிழ்மொழி நூல்கள் காணப்படுகின்றது.
- சங்ககாலத்தில் திருமுருகாற்றுப்படை, பரிபாடல் முருகனின் பரத்துவம் பற்றி கூறுகின்றது.
- தோத்திரப் பாடர்களுள் - திருப்புகழ் - முருகன் புகழ்பாடுபவன.
- குமர குருபரரின் கந்தர்கலி வெண்பா முருகன் அருள் கூறுவன.
- வடமொழியில் காளிதாசனின் முமாரசம்பவம், பாணினியின் விபாகரண சூத்திரம், ஸ்ரீ தத்துவ நீதி என்பவை குமாரனின் வரலாறு, பரத்துவம் என்பன பற்றி கூறுகின்றது.

[ 5 + 5 + 5 + 5 = 20 புள்ளிகள்]

07) I) ஆழ்வார் என்பதன் விளக்கம்

- "ஆழ்வார்" என்பதன் விளக்கம் திருமாலின் மங்கள கல்யாண குணங்களில் தம்மை ஆழ்த்தியவர்கள்.
- வைணவ மத பக்தர்களை ஆழ்வார்கள் என்று அழைப்பார்கள்.
- பன்னிரு ஆழ்வார்கள் :- .
  பொய்கையாழ்வார்
  நம்மாழ்வார்
  ஆண்டாள்
  திருமழிசையாழ்வார்
  பூதத்தாழ்வார்
  குலசேகராழ்வார்
  மதுரகவியாழ்வார்
  திருமங்கையாழ்வார்
  பேயாழ்வார்
  தொண்டரடிப் பொடி ஆழ்வார்
  திருப்பாணாந்தாழ்வார்
  பெரியாழ்வார்.
- பன்னிரு ஆழ்வார்களது பாடல்களின் தொகுப்பே நாலாயிரந் திவ்விய பிரபந்தம் ஆகும். அதனைத் தொகுத்தவர் ஸ்ரீ மந்நாத முனிவர் ஆவார்.

agaram.lk

II) நம் ஆழ்வாரின் பணிகள்

- வைணவ சமய உண்மைகளான தத்துவம், இதம், புருடார்த்தம் என்ற மூன்று பிரிவுகளையும், அர்த்த பஞ்ச ஞானத்தையும், வைணவ சமய தத்துவங்கள். இவை பற்றிய உண்மைகள், இறைவனுக்கும் புரியும் கைங்கரியங்கள், வீடு பேறுமுதலான வைணவ சமயக் கருத்துக்களையும் தமது பாடல்களில் குறிப்பிட்டு வைணவ சமய வளர்ச்சிக்கு அரும் பணியாற்றியுள்ளார்.

III) நம் ஆழ்வார் பாடலில் காணப்படம் பிரம சூத்தரம் பற்றிய கருத்துக்கள்.

- உபநிடதங்கள், பகவத்கீதை பிரம்மசூத்திரம் ஆகிய மூன்றும் வேதாந்த்தின் அடிநிலைகளாகும். பிரம்ம சூத்திரம் தத்துவ பரம், உபாசணபரம் என்ற இரு பகுதிகளைக் கொண்டது.
- நம்மாழ்வாரின் திருவாய் மொழியில் முதல் 10 பாசுரங்களும் "தத்துவபரம்" என்றும் அடுத்த 10 பாசுரங்களும் 'உபாசனபரம்' என்றும் பூர்வசாரியர்கள் நிச்சயித்துள்ளனர்.
- தத்துவ பரம் என்ற முதல் 10 பாசுரங்களும் "தத்துவ பரம்" என்றும் அடுத்த 10 பாசுரங்களும் "உபாசன பரம்" என்றும் பூர்வாசாரியர்கள் நிச்சயித்துள்ளனர்.
- தத்துவ பரம் என்ற முதல் 10 பாசுரங்களில் இறைவனின் குணம், அவரின் செயல்கள், பெருமைகள் என்பவற்றைக் குறிப்பிட்டுள்ளார்.
- உபாசனபரம் எனும் அடுத்த 10 பாசுரங்கள்

  "வீடுமின் முற்றவும் வீடு செய்து உம் முயிர்
  
  வீடுடை யானிடை வீடு செய்மினே"
  
  இதனூடாக நாம் அடையும் பயனை முதலில் சொல்லி, ஜீவாத் மாவின் நிலையையும் கூறி, அதன் பின் ஜீவன் அடையும் பயனையும் தெரிவித்துள்ளார்.
- பிரம சூத்திரத்தில் பொருள் விஷயமாக ஐயம் ஏற்படும் போது திருவாய மொழியைக் கொண்டு அந்த ஐயம் தீரப்பெற்று சூத்திர அர்த்தங்களைப் பாஷியக்காரர் நிர்ணயிப்பர் எள்பார் அழகிய மணிவாளப் பெருமாள் நாயனார்.

[ 4 + 8 + 8 = 20 புள்ளிகள்]

08) I) திருமந்திர நூலின் உட்பொருள்

- அது யோக சாதனை நூல், மந்திர சாத்திரம், தந்திர சாத்திரம் எனப் போற்றப்படும்.
- சைவத்தின் முடிந்த முடிபான சித்தாந்தக் கொள்கை பற்றி முதன்முதலில் குறிப்பிட்ட திருநூல்.
- அண்டவியல், வானவியல், கணிதவியல் உள்ளிட்ட இந்துக்களின் பௌதீக அறிவியல் பற்றிய குறிப்புக்கள் செறிந்துள்ளன.
- உயிர்வர்க்கங்களின் தோற்றம், நோய்கள், சிகிச்சை உள்ளிட்ட உயிரியல், மருத்துவ சிந்தனைகளைக் கொண்ட சிறப்பு நூல்
- ஒழுக்கத்தை வலியுறுதிக் கூறும் நூல் அனுபவஞானத்தின் திருநூல்.
- சமயம், தத்துவம், அறிவியல் ஆகியவற்றை ஒருங்கே தரும் கலைக்களஞ்சியம்.
- தமிழில் 9 ஆகமங்களை விரித்துத் தமிழ்படுத்திய நூல் என்பன இதன் உள்ளடக்கம் ஆகும்.

agaram.lk

01) முதலாம் தந்திரம் - காரணாகமத்தின் சாரம்
02) இரண்டாம் தந்திரம் - காமிகாகமத்தின் சாரம்
03) மூன்றாம் தந்திரம் - வீராக மத்தின் சாரம்.‘
04) நான்காந் தந்திரம் - சிந்தியாகமத்தின் சாரம்
05) ஐந்தாந் தந்திரம் - வாதுளாகமத்தின் சாரம்.
06) ஆறாந் தந்திரம் - வியாமளாகமத்தின் சாரம்.
07) ஏழாந் தந்திரம் - கலோத்தராகமத்தின் சாரம்
08) எட்டாந் தந்திரம் - சுப்பிராகமத்தின் சாரம்.
09) ஒன்பதாந் தந்திரம் - மகுடாகமத்தின் சாரம்.

II) சிவ வாக்கியரின் போதனைகள்

- சிவவாக்கியர் பழமைவாதிகளுக்குப் புரட்சியாளர், புதுமையாளர்களுக்கு நல்ல சிந்தனையாளர்.
- எங்கும் பரந்துள்ள இறைவனைச் ‘‘சுருக்கம் அற்றசோதி’’ என்று கூறுகிறார்.
- மற்றைய சித்தர்களப் போலவே இவரும் சில குறியீடுகளைக் பயன்படுத்தி தன் சிந்தனைகளை வெளிப்படுத்தியுள்ளார்.
- ‘‘ஒன்றே குலம் ஒருவனே தேவன் உள்ளமே பெருங்கோயில்; ஆன்ம அனுபவமே பரமுத்தி’’ என்பன இவர் கூறும் உண்மைகளாகும்.
- சாதி வேறுபாடுகளைக் களைந்து சமய, சமரச, சன்மார்க்க நெறிகளைப் பரப்பியவர். சாதி பேதமற்ற நிலையை, சிவவாக்கியவர் தமது பாடலில் தெளிவாகக்காட்டியுள்ளார். சமுதாய ஏற்றத்தாழ்வை அவர் வன்மையாகக் கண்டிக்கின்றார்.
- சிவவாக்கியர் தமது பாடல்களில் தமிழ்ச் சைவ மரபிற்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளார்
- திருக்கோயில் வழிபாடுகள், சடங்கு முறைகள் என்பன உண்மையான சமய நெறியாகாது என்பதைச் சுட்டிக் காட்டுகிறார்.
- மனிதனின் உள்ளே உறைகின்ற இறைவனைப் பூசை முதலான புறச் சடங்குகளால் காண முடியாது. என்பதனாலேயே ‘‘கோயிலாவது ஏதடா ; குளங்களாவது ஏதடா’’ என்று கேட்கிறார்.

[ 10 + 10 = 20 புள்ளிகள்]

பகுதி I 25 x 2 = 50 புள்ளிகள்
பகுதி II 20 x 5 = 100 புள்ளிகள் ÷ 2 = 50 புள்ளிகள்

agaram.lk